පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව - උතුරු මැද පළාත
மாகாணக் கல்வித் திணைக்களம் - வட மத்திய மாகாணம்
DEPARTMENT OF EDUCATION – NORTH CENTRAL PROVINCE

தரம் 10

இரண்டாந் தவணைப் பரீட்சை - 2019

பாடசாலையின் பெயர் : ...............................................................................................

மாணவர் பெயர்/ சுட்டெண் : ..........................................................

...................................................................................................... நேரம் : 03 மணித்தியாலம்

குடியியற் கல்வி
பகுதி I

**கவனிக்க**

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க. (பரீட்சையில் விடை எழுதுவதற்கு பல்தேர்வு விடைத்தாள் வழங்கப்படும்.)**

01. பிரித்தானியாவில் பிரதிநிதித்துவ ஜனநாயகம் தோன்றுவதற்குக் காரணமாக அமைந்த புரட்சி
 1. அமெரிக்கப் புரட்சி 2. பிரான்சியப் புரட்சி
 3. கலாசாரப் புரட்சி 4. ஆங்கிலப் புரட்சி

02. ஜனநாயக மக்கட் சமூகத்தில் காணப்படும் பண்பு அல்லாதது
 1. பிறர் கருத்துக்கு மதிப்பளித்தல்
 2. சமத்துவம் பேணப்படல்
 3. தீர்மானம் எடுக்கும் போது சிறுபான்மையினர் கருத்துக்கு மதிப்பளித்து அவர்களது தீர்மானத்தை நிறைவேற்றல்
 4. உரிமைகளை அனுபவித்தலினூடாக கடமைகளை நிறைவேற்றல்

03. ஒரு ஜனநாயக நாட்டின் அரசியல் உரிமை அல்லாதது
 1. வாக்களிக்கும் உரிமை 2. தேர்தலில் வேட்பாளராக நிற்கும் உரிமை
 3. வாழும் உரிமை 4. அரசாங்கத்தை விமர்சிக்கும் உரிமை

04. சனநாயக நாட்டில் சிறந்த ஆட்சியாளர்கள் உருவாக வேண்டுமாயின் அதற்குக் காரணமாக அமைவது
 1. நீதித்துறை 2. வாக்காளர்கள்
 3. ஊடகம் 4. பொது வரட்சித்துறை

05. சனநாயக நாட்டில் பொதுமக்கள் அரசாங்கத்தின் மீது கொண்டுள்ள நம்பிக்கைக்கு அடிப்படையாக அமைவது
 1. கருத்துக் கணிப்பு 2. சட்டவாக்கம்
 3. சட்டத்தின் ஆட்சி 4. பொதுசன அபிப்பிராயம்

06. பின்வரும் நாடுகளில் ஒரு கட்சி முறை நடைபெறும் நாட்டுத் தொகுதி
 1. பிரித்தானியா, சீனா 2. சீனா, கியூபா
 3. அமெரிக்கா, பிரான்ஸ் 4. நியுசிலாந்து, அவுஸ்திரேலியா

07. இலங்கையிலுள்ள நிர்வாக மாவட்டங்களின் எண்ணிக்கை
 1. 20 2. 22
 3. 25 4. 23

08. குறித்த ஒரு நாட்டில் ஜனநாயக ஆட்சியைப் பாதுகாக்க வேண்டுமாயின் அரசியல் யாப்பில் எத்துறை சுயாதீனமாக இயங்க வேண்டும்
 1. சட்டத்துறை 2. நீதித்துறை
 3. ஊடகத்துறை 4. நிறைவேற்றுத்துறை

Education NCP - www.edncp.lk

09. தேர்தலை எதிர்கொள்ளும் தரப்பினர் சமவாய்ப்பையும், சுதந்திரமான தேர்தல் வாய்ப்பினையும் பெற்றுக் கொள்ளும் சூழல்

1. நல்லாட்சி
2. அரசியல் பங்கேற்பு
3. சட்டத்தின் ஆட்சி
4. நியாயமான தேர்தல்

10. சட்டசபையின் செயற்பாடுகள் அல்லாதது

1. சட்டத்தை உருவாக்குதல்
2. நிதி நிர்வாகம்
3. நிறைவேற்றுத்துறையை வழிநடாத்துதல்
4. நீதி பரிபாலனத்தை மேற்கொள்ளுதல்

11. மத்திய அரசானது தனது நிர்வாக அதிகாரத்தை தேசிய மட்டத்திலிருந்து பிராந்திய மட்டம் வரை வழங்குவது

1. அதிகாரக் கையளிப்பு
2. அதிகார ஒப்படைப்பு
3. அதிகாரப் பன்முகப்படுத்தல்
4. அதிகாரப் பகிர்வு

12. சமஷ்டி ஆட்சியொன்று வெற்றி பெறுவதற்கான அடிப்படை இயல்புகள் அல்லாதது

1. யாப்புக்கு இணங்க செயற்படுதல்
2. ஆள்புல எல்லைக்குள் இருக்கும் சகல மக்களையும் தேசிய உறவுடன் வாழ்தல்
3. நீதித்துறையின் மீது நிர்வாகத்துறை தனது மேலாதிக்கத்தை நிலைநாட்டல்
4. நீதி வழங்கல் நேர்மையான முறையில் மாநிலங்களுக்கிடையில் பகிரப்பட்டிருத்தல்

13. 'இலங்கையில் முதன் முதல் உருவாக்கப்பட்ட மாநகர சபை கொழும்பு மாநகர சபையாகும்.'' இது உருவாக்கப்பட்ட ஆண்டு எது?

1. 1965
2. 1865
3. 1931
4. 1910

A. அரசின் நிர்வாக சட்டவாக்கத்துறை அதிகாரங்கள் மட்டும் மத்திய அரசிடம் காணப்படல்
B. சட்டவாக்க அதிகாரம் மத்திய மாநில அரசுகளுக்கிடையில் யாப்பு ரீதியாகப் பகிரப்பட்டிருத்தல்
C. பாராளுமன்ற கட்டளைச் சட்டத்தின் மூலம் அதிகாரம் பன்முகப்படுத்தப்பட்டிருக்கும்
D. யாப்புக்கு விளக்கமளிப்பதுடன் சுயாதீனமானதும், சுதந்திரமானதுமான இயக்கத்தை நீதித்துறை கொண்டிருத்தல்
E. தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தல்

14. சமஷ்டி அரசொன்றின் இயல்புகள்

1. AB 2. CD 3. AE 4. BD

15. ஒற்றையாட்சி அரசொன்றின் இயல்புகள்

1. AB 2. BE 3. AC 4. CE

16. பின்வரும் நாடுகளின் தொகுதிகளில் ஒற்றையாட்சி மட்டுமேயுள்ள நாடுகளின் தொகுதி

1. அவுஸ்திரேலியா, கனடா, ஐக்கிய அமெரிக்கா
2. இஸ்ரேல், கனடா, பலஸ்தீனம்
3. பிரித்தானியா, சிங்கப்பூர், சுவிஸ்லாந்து
4. பிரான்ஸ், ஐக்கிய இராச்சியம், இலங்கை

17. மாநகர சபையின் தலைவர் அழைக்கப்படுவது

1. தலைவர்
2. பிரதானி
3. செயலாளர்
4. நகரபிதா

18. தற்காலத்தில் நவீன அரசுகள் அதிகாரத்தைப் பரவலாக்குவதற்கான காரணம்

1. உள்நாட்டுக் குழப்பம்
2. பன்மைத்துவ சமூகக் கட்டமைப்பு
3. சமூகத்தின் சிக்கல் தன்மை
4. மேற்கூறிய யாவும்

19. இலங்கையில் நிர்வாக அதிகாரத்தைப் பன்முகப்படுத்தும் போது மாவட்ட மட்டத்தில் அதனைச் செயற்படுத்துபவர்

1. பிரதேச செயலாளர்
2. மாவட்ட அமைச்சர்
3. மாவட்டச் செயலாளர்
4. தவிசாளர்

Education NCP- www.edncp.lk

20. இலங்கையில் மாகாண சபைகள் அமைக்கப்பட்டமைக்கான சட்டங்கள்
   A. 13ம் திருத்தச் சட்டம்
   B. 42 / 1987 கட்டளைச் சட்டம்
   C. 19ம் திருத்தச் சட்டம்
   1. A மட்டும் 2. A யும் B யும் 3. B மட்டும் 4. B யும் C யும்

21. சுவிஸ்லாந்தின் மத்திய அரசுக்குரிய அதிகாரம் அல்லாதது
   1. வெளிவிவகாரம் 2. கல்வி உயர்கல்வி
   3. போர் சமாதானம் 4. பாதுகாப்பு

22. ஐக்கிய அமெரிக்காவில் செயற்படும் மொத்த மாநிலங்களின் எண்ணிக்கை
   1. 20 2. 50
   3. 70 4. 100

23. பின்வருவனவற்றுள் ஒற்றையாட்சி முறையின் நன்மையாகக் கருதக்கூடியது
   1. பெரிய நிலப்பரப்பு அரசுக்குப் பொருந்தாது
   2. தேசிய உணர்வும் ஒருமைப்பாடும் மேலோங்கிக் காணப்படல்
   3. அரசாங்கம் தன்னிச்சையாக செயற்பட வாய்ப்புண்டு
   4. சிறுபான்மை சமூகங்கள் பாதிக்கப்படலாம்

24. "எல்லா வகையிலும் அரசியல் அதிகாரம் ஒரு மத்திய நிறுவனத்தினுள் குவிந்திருப்பின் அது ஒற்றையாட்சி முறையாகும்." எனக் கூறியவர்
   1. பேராசிரியர் ஹர்மன் ஜே பைனர் 2. பேராசிரியர் காணர்
   3. பேராசிரியர் ஐவர் ஜெனிங்ஸ் 4. பேராசிரியர் ஹரல்ட் ஜே லஸ்கி

25. பன்மைப் பண்பாட்டுச் சமூகம் உருவாகுவதில் செல்வாக்குச் செலுத்தும் குடிபெயர்வு தொடர்பான காரணி
   1. சேனன், குத்தகனின் ஆக்கிரமிப்பு
   2. பண்டு பாரிந்த குழுவினரின் ஆக்கிரமிப்பு
   3. கலிங்க மாகனின் ஆக்கிரமிப்பு
   4. பண்டுவாசுதேவனும் குழுவினரும் வருகை தந்தமை

26. பல் கலாசார சமூகம் உள்ள நாடு அல்லாதது
   1. சவூதி அரேபியா 2. இந்தியா
   3. மலேசியா 4. இலங்கை

27. நல்லாட்சியின் அடிப்படைப் பண்பு
   1. உரிமைகள் கவனிக்கப்படாமை
   2. ஊடக சுதந்திரம் பாதுகாத்தல்
   3. ஊழல் முறைகேடுகள் மலிந்து காணப்படல்
   4. சட்டத்தின் ஆட்சி இடம்பெறாமை

28. புத்தபெருமானின் பிறப்பு, ஞானம், பரிநிர்வானம் என்பவற்றை நினைவு கூறுமுகமாக இலங்கையில் பௌத்தரால் கொண்டாடப்படும் விழா
   1. சித்திரை வருடப் பிறப்பு 2. வெசாக்
   3. கிறிஸ்மஸ் 4. தைப்பொங்கல்

29. இலங்கையில் பௌத்த சமயத்தவரது புனித நூலாகக் கருதப்படுவது
   1. திரிபீடகம் 2. திருக்குர்ஆன்
   3. சீராப்புராணம் 4. பைபிள்

30. பல்கலாசாரத்தைக் கொண்ட மலேசியா நாட்டில் பயன்படுத்தப்படும் மொழி
   1. பிரெஞ்சு 2. நேபாளி
   3. மண்டரின் 4. மைதிலி

31. நவீன அரசுகளில் பன்மைப் பண்பாட்டுக் கலாசாரத்தைப் பின்பற்றும் ஐக்கிய அமெரிக்காவிற்கே உரித்தான இனத்தவர்
   1. நீங்ரோக்கள் 2. சீனர்
   3. சீக்கியர் 4. பறங்கியர்

Education NCP - www.edncp.lk

32. ஒரு பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தில் நல்லாட்சியை செயற்படுத்துவதன் மூலம் அடையப் பெறும் அநுகூலம்
1. இனங்களுக்கிடையே நல்லுறவு ஏற்படும்
2. ஒருவருக்கொருவர் போட்டி மனப்பாங்கை விருத்தி செய்தல்
3. ஒருவரது குடியியல் உரிமைகளை அங்கீகரித்து வாழப்பழகுதல்
4. வேற்றுமைகளை நிலைநிறுத்தல்

33. பொருட்கள் உற்பத்தி செய்தல் தொடர்பாக மனித வலுவை அதிகம் பயன்படுத்துதல்
1. முதலீட்டு நுட்பம்
2. உழைப்பு நுட்பம்
3. இயந்திர நுட்பம்
4. தகவல் தொழிநுட்பம்

34. சமகாலப் பொருளாதார முறையில் உற்பத்தித் துறையினுள் உள்ளடங்காதவை
1. விவசாய உற்பத்தி
2. கைத்தொழில் உற்பத்தி
3. மீள்கட்டுமானப் பணி முகாமைத்துவம்
4. சேவை உற்பத்தி

35. நெல் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் உரம் எவ்வகைப் பொருள்
1. நுகர்வுப் பொருள்
2. இடைநிலைப் பொருள்
3. மூலதனப் பொருள்
4. ஆடம்பரப் பொருள்

36. சமதர்ம பொருளாதாரத்தின் சந்தை இயல்பினை அதிகமாகக் கொண்டுள்ள நாடு
1. சீனா
2. பல்கேரியா
3. தாய்வான்
4. சிங்கப்பூர்

37. முதலாளித்துவப் பொருளாதார முறையின் அடிப்படைப் பண்புகளுள் ஒன்று
1. மத்திய திட்டமிடல் சபையின் மூலம் பொருளாதாரம் நிர்வகிக்கப்படல்
2. உற்பத்திக் காரணிகள் அனைத்தும் அரசுடைமையாக்கப்பட்டிருத்தல்
3. சமூக நன்மையைக் கருத்திற்கொண்டு அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு காணல்
4. போட்டித் தன்மை வாய்ந்த சந்தை முறை நிலவுதல்

38. இலங்கையில் திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகம் செய்த ஆண்டு
1. 1948
2. 1972
3. 1977
4. 1912

39. உற்பத்தி செய்யப்படும் பொருட்களை நுகர்வோரிடம் கொண்டு செல்லும் செயன்முறை
1. விநியோகம்
2. நுகர்வு
3. உற்பத்தி
4. தொழில்

40. பின்வருவனவற்றுள் பொருளாதாரப் பண்டமாகக் கருதப்படக்கூடியது
1. சூரிய ஒளி
2. மழை நீர்
3. வளி
4. உணவு

(40 புள்ளிகள்)

Education NCP www.edncp.lk

## பகுதி II

- ❖ கவனிக்குக.
- ❖ முதலாம் வினா கட்டாயமானது.
- ❖ முதலாம் வினா உட்பட ஏனைய நான்கு வினாக்களுடன் மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01) 1. ஜனநாயகத்தின் இரு பிரிவுகளும் எவை?

2. i. "மக்களால் மக்களுக்கான மக்களின் ஆட்சி ஜனநாயகம்"
   ii. "சனநாயக ஆட்சி அனைவரதும் உரிமைகளையும் பெற்றுக் கொள்ளும் ஆட்சியாகும்."
   மேலே குறிப்பிடப்பட்ட வரைவிலக்கணங்களைக் கூறியவர்களை முறையே தருக.

3. தற்போது இலங்கையில் காணப்படும் உள்ளூராட்சி அமைப்புக்கள் 2 தருக.

4. எதனை எவ்வாறு உற்பத்தி செய்வது என்ற பிரச்சினைகள் வளங்கள் தொடர்பிலான எவ்வகைப் பிரச்சினையாகும்?

5. பொருளாதாரமொன்றின் பிரதான செயற்பாடுகள் இரண்டு தருக.

6. பண்பாட்டு ரீதியான கடமைகளுக்கு இரண்டு உதாரணம் தருக.

7. இலங்கையில் உருவாக்கப்பட்ட பிரதேச சபையின் அதிகாரங்கள் 2 தருக.

8. கலப்பு பொருளாதார முறைமையின் அடிப்படைப் பண்புகள் 2 தருக.

9. வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கு இலங்கை அரசினால் மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டங்கள் 2 தருக.

10. இலங்கையில் காணப்படும் சந்தைப் பொருளாதார முறையின் பண்புகள் 2 தருக.

(10 × 2 = 20 புள்ளிகள்)

02) 1. சனநாயக ஆட்சியொன்று வெற்றி பெற வேண்டுமாயின் இரண்டு முன் நிபந்தனைகள் தருக. (02 புள்ளிகள்)

2. சனநாயக சமூகத்தில் பிரசையிடம் காணப்படும் பண்புகள் 03 தருக. (03 புள்ளிகள்)

3. தற்கால சனநாயக சமூகத்தில் சுமுகமான சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு தேவையான பண்புக்கூறுகள் 05 தருக. (05 புள்ளிகள்)

03) 1. இலங்கையில் தேர்தல் தொகுதிகளைப் பிரிக்கும் போது கருத்தில் எடுக்கப்படும் இரு காரணிகள் எவை? (02 புள்ளிகள்)

2. சனநாயக நாட்டில் சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தல் நடாத்தப்படுவதற்கான காரணங்கள் 03 தருக. (03 புள்ளிகள்)

3. சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலின் பண்புகள் 03 ஐக் குறிப்பிட்டு ஒன்றை விளக்குக. (05 புள்ளிகள்)

04) 1. "அதிகாரத்தைப் பகிர்ந்தளித்தல்" எனும் பதத்தினை வரைவிலக்கணப்படுத்துக. (02 புள்ளிகள்)

2. நவீன அரசுகள் அதிகாரப் பங்கீடு செய்வதற்கான காரணங்கள் மூன்று தருக. (03 புள்ளிகள்)

3. சமஷ்டி அரசொன்றின் பண்புகள் மூன்றைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றை சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

Education NCP - www.edncp.lk

05) 1. சுவிட்சர்லாந்தின் கென்ரன்களுக்குரிய அதிகாரங்கள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

2. ஐக்கிய அமெரிக்காவின் மத்திய அரசுக்குரிய அதிகாரங்கள் 03 தருக. (03 புள்ளிகள்)

3. சுவிடசர்லாந்து சமஷ்டி முறையின் சிறப்பியல்புகள் மூன்றைக் குறிப்பிட்டு ஒன்றை விளக்குக. (05 புள்ளிகள்)

06) 1. இலங்கையில் காணப்படும் இனங்கள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

2. நல்லாட்சியின் அடிப்படைப் பண்புகள் மூன்று தருக. (03 புள்ளிகள்)

3. பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தின் சிறப்பான செயற்பாட்டிற்கு பிரஜை ஒருவரினால் விருத்தி செய்யப்பட வேண்டிய பண்புகள் மூன்றைத் தந்து ஒன்றை விளக்குக. (05 புள்ளிகள்)

07) 1. சேவைகள் உற்பத்திகள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

2. பிரதான பொருளாதார முறைகள் மூன்று தருக. (03 புள்ளிகள்)

3. சமதர்மப் பொருளாதாரமொன்றின் அடிப்படைப் பண்புகள் மூன்றைக் குறிப்பிட்டு ஒன்றை விளக்குக. (05 புள்ளிகள்)

Education NCP - www.edncp.lk

விடைகள்

தரம் - 10

குடியியற் கல்வி

இரண்டாந் தவணைப் பரீட்சை – 2019

**பகுதி – I**

| | | | |
|---|---|---|---|
| 01) 4 | 02) 3 | 03) 3 | 04) 2 |
| 05) 3 | 06) 2 | 07) 3 | 08) 2 |
| 09) 4 | 10) 4 | 11) 3 | 12) 2 |
| 13) 2 | 14) 4 | 15) 3 | 16) 4 |
| 17) 4 | 18) 4 | 19) 3 | 20) 2 |
| 21) 2 | 22) 2 | 23) 2 | 24) 1 |
| 25) 4 | 26) 1 | 27) 2 | 28) 2 |
| 29) 1 | 30) 3 | 31) 1 | 32) 3 |
| 33) 2 | 34) 3 | 35) 2 | 36) 1 |
| 37) 4 | 38) 3 | 39) 1 | 40) 4 |

( 40 புள்ளிகள்)

**பகுதி – II**

01) 1. நேரடி ஜனநாயகம், மறைமுக ஜனநாயகம்

2. ஆபிரஹாம் லிங்கன், சீலர்

3. மாநகரசபை, நகரசபை, பிரதேசசபை

4. வள ஒதுக்கீட்டுப் பிரச்சினை, பயன்படுத்தும் நுட்பங்கள் தொடர்பான பிரச்சினை

5. உற்பத்தி, நுகர்வு, விநியோகம்

6. மூத்தோரை மதித்தல், ஆசிரியரை மதித்தல், விழுமியங்களைப் பேணுதல், நாட்டின் வளங்களைப் பாதுகாத்தல்

7. தமது பிரதேசத்தை சுத்தமாக வைத்திருத்தல், திண்மக் கழிவுகளை சிறிய தெருக்களை அபிவிருத்தி செய்தல், அகற்றுதல்

8. அரச தனியார் துறை இணைந்து பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு காணல்
- ❖ நலன்புரி சேவைகள் அரசினால் மேற்கொள்ளப்படல்
- ❖ உற்பத்திக் காரணிகளின் உரிமம் அரசு மற்றும் தனியாரிடம் காணப்படல்

9. சமுர்த்தித் திட்டம், சுயதொழில் ஊக்குவிப்பு, தோட்டச் செய்கைத் திட்டம்

10. தனியார் துறை செயற்பாடு ஊக்குவிக்கப்படல்
- ❖ ரூபாவின் பெறுமதியினைச் சந்தையில் மிதக்கவிடல்

02) 1. சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தல்
❖ சட்டத்தின் ஆட்சி நடைபெறல்
❖ நீதித்துறை சுதந்திரமாகச் செயற்படல்

2. கலந்துரையாடல் மூலம் தீர்மானத்திற்கு வரல்
❖ பெரும்பான்மை கருத்துக்களுக்கு மதிப்பளித்தல்
❖ சட்டத்திற்கு மதிப்பளித்தல்

3. சட்டத்தின் ஆட்சி இருத்தல்
❖ நீதித்துறை சுதந்திரமாகச் செயற்படல்
❖ சிறுபான்மையினரின் கருத்துக்களுக்கு மதிப்பளித்தல்
❖ சமத்துவம் மற்றும் சம உரிமை கிடைக்கப்பெறல்
❖ கலந்துரையாடல் மூலம் தீர்மானம் எடுத்தல்
❖ பெரும்பான்மையினரின் கருத்துக்களுக்கு மதிப்பளித்தல்

03) 1. நிலப்பரப்பு
❖ சனத்தொகை

2. வாக்காளர்களுக்குத் தான் விரும்பும் அரசியல் கட்சிக்கு ஆதரவளிக்க வாய்ப்பு இருத்தல்
❖ தேர்தல் மூலம் ஆட்சி நிறுவனங்களுக்கு பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய வாய்ப்பு இருத்தல்
❖ ஆட்சி செயற்பாடுகளில் மக்கள் பங்க பற்றுறவதற்கான வாய்ப்பு ஏற்படல்

3. குறித்த காலத்தினுள் தேர்தல் நடைபெறல்
❖ சுமுகமான சூழலில் தேர்தல் நடைபெறுதல்
❖ தேர்தல் சட்டதிட்டங்களுக்கு அமைய தேர்தல் நடாத்தப்படுதல்
❖ சுதந்திரமான தேர்தல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான உரிமை காணப்படல்

04) 1. மத்திய அரசின் சட்டத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை அதிகாரங்கள் அரசியல் யாப்பின் மூலம் பிராந்திய ஆட்சி அலகுகளிடம் ஒப்படைத்தல்

2. வேற்றுமையில் ஒற்றுமை
❖ தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படல்
❖ பாரிய நிலப்பரப்பில் ஆட்சி நிர்வாகத்தின் கடினம்

3. எழுதப்பட்ட யாப்பு
❖ அதிகாரம் அரசியல் யாப்பில் உள்ளடங்கப்படல்
❖ அரசியல் யாப்புக்கு விளக்கமளிக்கும் அதிகாரம் உயர் நீதிமன்றத்திடம் காணப்படல்

05) 1. கல்வி, உயர்கல்வி
❖ பெருந்தெருக்கள்
❖ கைத்தொழில்
❖ சமயம்
❖ வங்கி
❖ செய்திப் பத்திரிகை

2. வரி அறவிடல்
- ❖ நிதி
- ❖ தேசிய பாதுகாப்பு
- ❖ வெளிவிவகாரம்
- ❖ தேசிய பொருளாதார அபிவிருத்தி

3. மத்திய அரசுக்கும் கென்ரன் அரசுக்குமான அதிகாரம் யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏனைய அதிகாரங்கள் மத்திய அரசுக்குரியன
- ❖ கென்ரன்களுக்கு அதிகாரத்தை சுயாதீனமாக செயற்படுத்த முடியாது
- ❖ கென்ரன்கள் தீர்மானம் மேற்கொள்ளும் போது மக்கள் கருத்திற்கான நேரடி ஜனநாயக முறையை பிரயோகிக்க முடியும்

06) 1. சிங்களவர், இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர், மலாயர்

2. ஊடக சுதந்திரம்
- ❖ வெளிப்படையான தன்மை
- ❖ வளங்களின் வினைத்திறன்
- ❖ ஊழலற்ற ஆட்சி நிர்வாகம்
- ❖ சுதந்திரமும் நீதியும் நிலைநாட்டப்படல்

3. பிற கலாசாரங்களை மதித்தல்
- ❖ முரண்பாடு ஏற்படாத விதமாக செயற்படல்
- ❖ ஒற்றுமையாக செயற்படல்
- ❖ பிற சமயங்களுக்கு இடையூறு ஏற்படுத்தாதிருத்தல்
- ❖ புரிந்துணர்வுடன் செயற்படல்
- ❖ பிறர் கருத்துக்கு மதிப்பளித்தல்

07) 1. கல்வி, சுகாதாரம், தபால், தொலைத்தொடர்பு, மின்சாரம்

2. முதலாளித்துவப் பொருளாதார முறை
- ❖ சமதர்ம பொருளாதார முறை
- ❖ கலப்புப் பொருளாதார முறை

3. உற்பத்தி காரணிகள் அரசுடைமை
- ❖ மத்திய திட்டமிடல் சபை பொருளாதார நிர்வாகம்
- ❖ அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் போது சமூக நன்மையை கருத்திற் கொள்ளல்

අපොස සා/පෙළ පසුගිය විභාග ප්‍රශ්නෝත්තර වට්ටම් සහිතව ගෙදරටම ගෙන්වාගැනීමට

**www.lol.lk**
Learn Ordinary Level

LOL.lk online Book Store

අමතන්න - 071 777 4440/0756999990/071 8540371



# LOL.lk
online Book Store

071 777 4440/0756999990/071 8540371

## පළාත් ප්‍රශ්න පත්‍ර සහ පිළිතුරු පත්‍ර පොත්










## ආදර්ශ ප්‍රශ්න පත්‍ර සහ පිළිතුරු පත්‍ර පොත්










## කෙටි සටහන් පොත්










මිට්ටම් සහිතව ගෙදරටම ගෙන්වාගැනීමට

**www.lol.lk**

**Learn Ordinary Level**

අමතන්න - 071 777 4440/0756999990/071 8540371

PAST PAPERS
WIKI

ප්‍රශ්නපත්‍ර පොත්
ගෙදරටම ගෙන්ව ගන්න
ඔන්ලයින් ඔඩර් කරන්න
WWW.LOL.LK
වෙත යන්න

BUY NOW

Secure Payments By PayPal
NO PAYPAL ACCOUNT NEEDED!

ONLINE
BOOK STORE

An evening of fun for young readers

